முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

தரம் 5 மாணவர்களுக்கான நிகழ்நிலைப் பரீட்சை - 2021

பரீட்சை - 07

சுட்டெண் : .....

வினாத்தாள் - I

நேரம் - 1 மணித்தியாலம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாத் தொகுதிகள் உள்ளன.
- அனைத்து வினாக்களிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

www.ikeduLK

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved


● **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1)
A, C
D, E
B, F

(2)
A, E
B, C
D, F

(3)
C, F
B, D
A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்


(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ..... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், ... போன்றவை சில இடங்களாகும்.


முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

08.



கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றைக் கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8

(2) A - 10, B - 12, C - 4, D - 6

(3) A - 10, B - 12, C - 6, D - 4

● **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்

பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

09. இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?

(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று

10. இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே

(1) பூமி, வாஞ்சை, திருமுகம்

(2) நாடு, விருப்பம், திலகம்


(3) நாடு, நேயம், பெயர்

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43

12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.



அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.

(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.

(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

H	G	F	E
P			M
I			L
A	B	C	D

N	O
K	J

(1)


O	N
J	K

(2)

N	O
J	K

(3)

15.



X Y

கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

www.ikeu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

- **கமல், ராமு, வசி, அஜித் ஆகிய நான்கு நண்பர்கள் நாற்சந்தியில் நின்று விட்டு பிரிந்து சென்ற விபரம் தரப்பட்டுள்ளது.**

  - கமல் என்பவர் வடக்குத் திசையில் சென்றார்.
  - ராமு என்பவர் கமல் சென்ற திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.
  - வசி என்பவர் கிழக்குத் திசையில் சென்றார்.
  - அஜித் என்பவர் கமல், வசி சென்ற திசையின் மத்தியிலுள்ள திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.


16. அஜித் சென்ற திசை யாது?

(1) வடமேற்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு

17. 100 தொடக்கம் 110 வரை உள்ள எண்ணும் எண்களை இலக்கத்தில் எழுதும் போது பூச்சியம் எழுதப்படும் எண்களின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 11 (3) 10

18. பின்வரும் படங்களின் உதவியுடன் மாணவன் ஒருவன் கூறிய தகவல்களில் தவறெனக் கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.




(1) கேத்தலில் உள்ள நீரையும் கோப்பையில் உள்ள நீரையும் சேர்த்தால் 2*l* 850*ml* வரும்.

(2) பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும்.

(3) கூசா, கோப்பையில் உள்ள நீரின் மொத்த அளவு 2050*ml* ஆகும்.

19. அருகே தரப்பட்டுள்ள கனவுருவில் புள்ளிக் கோடிடப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் காணப்படும் பக்கங்கள், உச்சிகளின் எண்ணிக்கைகள் எத்தனை?



(1) பக்கங்கள் - 7 உச்சிகள் - 7

(2) பக்கங்கள் - 7 உச்சிகள் - 6

(3) பக்கங்கள் - 6 உச்சிகள் - 8

20. சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவர் தனது வாடிக்கையாளரிற்கு பூசனிக்காயைக் கொடுப்பதற்காக ஒரு பூசனிக்காயை தராசின் ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் 2 கிலோகிராம் படிக்கல்லை வைத்தார். மேலும் பூசனிக்காய் உள்ள தட்டில் சில படிக்கற்களை வைத்தபோது தராசு சமநிலையில் காணப்பட்டது. பூசனிக்காயின் நிறை 1 கிலோகிராம் 625 கிராம் எனின் வியாபாரி பூசனிக்காய் உள்ள தட்டில் வைத்த படிக்கற்கள் எவை?

(1) 200g, 100g, 70g, 5g (2) 300g, 40g, 30g, 5g (3) 200g, 100g, 50g, 20g, 5g

- திங்கள் தொடக்கம் ஞாயிறு வரை P, Q, R, S, T, U, V ஆகிய ஊழியர்கள் வாரத்தின் ஏழு நாட்களும் கடமைக்குச் செல்லும் ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளது.
  - வாரத்தின் நடு நாளில் P என்பவர் கடமைக்குச் செல்கிறார்.
  - U, S, V ஆகியோர் ஒழுங்கு முறையில் மூன்று நாட்களும் கடமைக்குச் செல்கின்றனர்.
  - V மற்றும் R ஆகியோர் கடமைக்குச் செல்லும் நாட்கள் இரண்டிற்கும் இடையே இன்னொருவர் மட்டும் வேலைக்குச் செல்கிறார்.
  - Q சனிக்கிழமை கடமைக்குச் செல்கிறார்.

21. S, T ஆகியோர் கடைக்கு வரும் நாட்கள் முறையே


(1) செவ்வாய், ஞாயிறு (2) திங்கள், ஞாயிறு (3) வியாழன், புதன்

22. T கடமைக்கு வந்து அடுத்து மூன்று நாட்களும் கடமைக்கு வரக் கூடியவர்கள் யாவர்?

(1) U, S, F (2) S, R, U (3) U, S, V

23. ஒரு வாங்கில் இடமிருந்து வலமாக முறையே அண்ணா, அம்மா, அப்பா, தங்கை நான் அமர்ந்திருந்தோம். முதலில் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். பின்பு அண்ணாவும் அப்பாவும் தங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தார்கள். மீண்டும் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். இப்போது வாங்கின் நடுவில் இருப்பது யார்?


(1) நான் (2) அப்பா (3) அண்ணா

24. 

இங்கு காட்டப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோன்றும் விதத்தினைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

25. 6 பேர் 8 நாட்களில் கிணறு ஒன்றை வெட்டி முடிக்கலாம். அவர்கள் 6 பேரும் மூன்று நாட்கள் வேலை செய்து முடித்தபின் அவர்களில் ஒருவர் சுகயீனம் காரணமாக வேலைக்கு வரவில்லை. எனின் மீதி வேலையை 5 பேர் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

(1) 5 நாட்களில் (2) 7 நாட்களில் (3) 6 நாட்களில்


26. குமாரின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட 65 பேர்களிடையே 47 பேர் பரிசுப்பொதியுடனும் 26 பேர் பூச்செண்டுடனும் காணப்பட்டனர். அவர்களில் சிலர் இரண்டையும் வைத்திருந்தனர். 8 பேரிடம் இவை எதுவும் காணப்படவில்லை. எனின் கலந்து கொண்டவர்களில் பரிசுப்பொதி மற்றும் பூச்செண்டு ஆகிய இரண்டையும் வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 8 (3) 12

www.ikeduu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

● **தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி 27, 28 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**



ஐங்கோணி வடிவமுள்ள பெட்டியொன்று மணிக்கூட்டுத் திசையில் சுழலுகின்றது. முன்பக்க முகப்பில் காட்டப்பட்ட இலக்கத்திற்குச் சமமான செக்கன்கள் கடந்த பின்னர் அதற்கடுத்த முகம் முன்பக்கத்திற்கு வரும்.

27. 10 செக்கன்களின் பின் முன்பக்க முகப்பில் காணப்படும் இலக்கம் எது?

(1) **v** (2) **iv** (3) **i**

28. முன்பக்கம் தென்படும் முகப்பு சுழன்று மீண்டும் அதே இலக்கமுடைய முகப்புத் தென்பட எவ்வளவு நேரம் தேவைப்படும்?

(1) 21 செக்கன்கள் (2) 15 செக்கன்கள் (3) 12 செக்கன்கள்


29. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண்பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும், பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 8 (2) 12 (3) 32


30. பணம் எடுக்கும் இயந்திரம் ஒன்றில் முதல் தடவை பணம் எடுக்கும் போது நாம் நினைத்த பணத்தின் இரண்டு மடங்கைத் தரும். இரண்டாம் தடவை எடுக்கும் போது முதல் தடவை எடுத்த பணத்தின் நான்கு மடங்கு கிடைக்கும். இரண்டாம் தடவை எடுத்த பணம் ரூபாய் 1200.00 எனின் முதலில் எடுக்க நினைத்த பணம் யாது?


(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 170.00 (3) ரூபாய் 150.00

31. அருகே உள்ள வடிங்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சதுரம் எது?




(1)


(2)



(3)

32. ஓர் ஓட்டப் பந்தயப் போட்டியில் இரண்டாவதாக ஓடிச் செல்லும் ஒருவரை பின்னுக்குத் தள்ளி முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனின் இப்போது உங்களுடைய நிலை என்ன?

(1) முதலாம் நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை

www.ikeu.lk

33. ஆறு இடங்கள் தொடர்புபடும் பாதையின் வரைபடம் தரப்பட்டுள்ளது. அம்புக்குறியால் காட்டப்படுவது பயணம் செய்யக் கூடிய திசைகள் ஆகும்.



ஒருவர் பேருந்து நிலையத்திலிருந்து அலுவலகம் வரை செல்வதற்கு ஒன்றுக்கொன்று வேறுபட்ட எத்தனை பாதைகள் உள்ளன?


(1) 7 (2) 8 (3) 9

34. ஒவ்வொரு பூவிலும் ஒரு வண்ணத்துப்பூச்சி இருந்தால் ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு பூ கிடைக்க மாட்டாது. அதே நேரம் ஒரு பூவில் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் இருந்தால் ஒரு பூ எஞ்சியிருக்கும் எனின் அங்குள்ள பூக்களினதும் பூச்சிகளினதும் எண்ணிக்கை யாது?

(1) பூக்கள் - 6 வண்ணத்துப்பூச்சிகள் - 8

(2) பூக்கள் - 5 வண்ணத்துப்பூச்சிகள் - 10


(3) பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4

35. 

தரப்பட்ட உருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கைகள் முறையே

(1) 8, 5 (2) 10, 3 (3) 8, 3


36. சம அளவிலான ஆறு பக்கங்களைக் கொண்ட வடிவமொன்று மூன்று தடவைகள் மடிக்கப்பட்டு துளைகள் இடப்பட்ட வடிவம் முன்னே தரப்பட்டுள்ளது. அதனை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?



(1) 
(2) 
(3) 

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

37. குற்றிகள் சில ஒன்றன் மீதொன்று அடுக்கப்பட்ட வடிவம் அருகே தரப்பட்டுள்ளது. இதனை முன்னாலிருந்து பார்க்கும் போது கண்ணுக்குப் புலப்படாத குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 குற்றிகள்

(2) 10 குற்றிகள்

(3) 12 குற்றிகள்

38. ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

A - பயன்படும் **B** - பலவகையில் **C** - மரங்களை **D** - காப்பது


E - வளர்த்துக் **F** - கடமையாகும் **G** - நம் **H** - எமக்குப்

(1) H B A C G D F E (2) G C A B H E F D (3) H B A C E D G F

39. தாளில் இருந்து பென்சிலை எடுக்காமல் கீறக்கூடிய உரு எது?

(1) 

(2) 

(3) 

40. தரப்பட்ட கூற்றுக்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடையை தெரிவு செய்க.

அ . தோமஸ் அல்வா எடிசன் 1847 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார்.

ஆ . என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சியில் பெற்றோர்கள் கடுமையாகப் பாடுபட்டனர்.

இ . அந்த ஆர்வத்தை வளர்க்கக் காரணமாக இருந்தவர் அவரது தந்தை தான்.

ஈ . அவரின் தந்தையார் சாதாரண வியாபாரி

உ . எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம்.

ஊ . எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும் போது அவருக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவாராம்.

(1) அ, உ, ஆ, ஈ, ஊ, இ

(2) அ, ஈ, ஆ, உ, இ, ஊ

(3) அ, ஈ, உ, ஆ, இ, ஊ

www.ikedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

தரம் 5 மாணவர்களுக்கான நிகழ்நிலைப் பரீட்சை - 2021

பரீட்சை - 07

சுட்டெண் : .....

வினாத்தாள் - II

நேரம் - 1 மணி 15 நிமிடம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாத் தொகுதிகள் உள்ளன.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

www.ikedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.

கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம், மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. வீதிகளிலும் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. சில வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது.

- கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) **"அடைக்கலம்"** என்பதைக் குறிக்கும் சொல் எது? .....

(ii) **"வீதியிலும்"** என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. .....

(iii) உயர்திணைப் பெயர்ச்சொல்லை எழுதுக. .....

(iv) **"கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம்"** இவ் வாக்கியத்தில் உள்ள அடைமொழிச் சொல் எது?

.....

(v) மக்கள் எங்கே தஞ்சம் புகுந்துள்ளனர்? .....

(vi) இறந்தகால பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. .....

2. பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) இவர் ..... கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார்.
(இளமையிலேயே, இழமையிலேயே)

(ii) பளபளவென மின்னும் ..... ஒரு தனியழகுதான்.
(தங்கப்பேளை, தங்கப்பேழை)

3. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✔) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பினுள் இடுக.

(i) **"நீவிர்"** என்பது முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் ஆகும். ( )

(ii) **"படிப்பான்"** என்பது உயர்திணைப் பன்மை எதிர்காலச்சொல் ஆகும். ( )

(iii) **"நீதிபதி"** என்பது இருபால் பொதுப்பெயர் ஆகும். ( )

4. கீழுள்ள தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

(i) கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு ..... எனப்படும். (ஒத்திகை / வெள்ளோட்டம்)

(ii) நமது முன்னோர் தமது அனுபவத்தின் மூலம் கண்டறிந்த உண்மைகளை மனத்தில் பதியும்படி சுருக்கமாக எடுத்துச் சொல்லும் தொடர் ..... (பழங்கதை / பழமொழி)

www.lkedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(i) விழாவிற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெறுகின்றன. **'தடல்புடல்'** என்பதன் கருத்து ..... (விறுவிறுப்பாக, ஆறுதலாக) என்பதாகும்.

(ii) பிரச்சினைகள் வரும்போது அவற்றிற்குத் தைரியமாக முகங்கொடுத்தல் வேண்டும். **"முகங்கொடுத்தல்"** என்பதன் கருத்து .....
(எதிர்கொள்ளல், ஓடிவிடுதல்) என்பதாகும்.

6. (i) தரப்பட்ட பழமொழியைப் பூர்த்தி செய்க.

கேட்காத ..... பார்க்காத ..... பாழ்

(ii) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதித் திருக்குறளைப் பூர்த்தி செய்க.

உள்ளத்தால் ..... உலகத்தார்

..... உளன்

7. சரியான விடையினை எழுதுக.

(i) அக்பர் சக்கரவர்த்தியின் முதன்மை மந்திரி யார்? .....

(ii) "சீயக்காய்" என்பதை எழுத்து வழக்கில் எழுதுக. .....

8. (i) "மாற்றான்" என்பதன் ஒத்த சொல் யாது? .....

(ii) "ஐக்கியம்" என்பதன் எதிர்ச்சொல் யாது? .....

(iii) தரப்பட்ட வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

எந்த எண் எனக்கும் ஒன்றும் புரியவில்லையே என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டான்


9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) குதிரைகளைக் கட்டும் இடம் ..... (பட்டி, லாயம், தொழுவம்)

(ii) இளவேனில், முதுவேனில், வசந்தம் போன்றவை ..... ஆகும்.
(மாதங்கள், காலங்கள்)

10. தரப்பட்ட உருக்களுக்கான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)  .....

(ii)  .....

www.ikedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(i) Watering the ..... (Plants, Radio, Book)

(ii) Washing the ..... (Television, Clothes, Clock)

12. தமிழ்க் கருத்தை எழுதுக.

(i) Is this yours? : .....

(ii) Can I help you? : .....

13. சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக.


වකුප්පරෑ : .....

14. தமிழ்க் கருத்தை எழுதுக.

என்ன லமய் : .....

15. ஆயிரத்தினிடம் 9, பத்தினிடம் 5, பத்தாயிரத்தினிடம் 4, நூறினிடம் 0, ஒன்றினிடம் 1 ஆகவுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.

.....


16. 

இவ் இலக்கங்களைப் பயன்படுத்தி 40 000 இற்கும் 60 000 இற்கும் இடைப்பட்ட எண்கள் இரண்டை எழுதுக.

....., ...


17. அருகே தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{4}$ பங்கினை நிழற்றுக.

(பேனை அல்லது பென்சில் பயன்படுத்தவும்.)



18. **ix + iv =** ☐ வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய உரோமன் எண்ணை எழுதுக.

.....

19. 

(i) தரப்பட்ட உருவினுள்ளே செங்கோணங்கள் எத்தனை உண்டு?

.....

(ii) இவ்வுருவைச் சமச்சீராகப் பிரிக்கும் இரண்டு கோடுகளை உருவில் வரைந்து காட்டுக.


20. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக ஊற்றும் போது ஒரு குவளையில் உள்ள நீரின் அளவை எழுதுக.

.....

www.lkedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

21. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

வடிவம்	பெயர்	விளிம்புகளின் எண்ணிக்கை	முகங்களின் எண்ணிக்கை	உச்சிகளின் எண்ணிக்கை
	.....	.....	.....	.....

22. பாடசாலை ஒன்றில் 30 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய ஆறு வகுப்பறைகளும், 35 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய நான்கு வகுப்பறைகளும் இருந்தன. எனின் பத்து வகுப்பறைகளிலும் இருக்கக் கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

23. என்னிடமுள்ள பென்சிலின் நீளம் 13cm 5mm ஆகும். தம்பியிடம் இருந்த பென்சிலின் நீளம் எனது பென்சிலின் நீளத்திலும் 4cm 7mm குறைவானது.

(i) தம்பியிடமிருந்த பென்சிலின் நீளம் யாது? .....cm .....mm

(ii) என்னிடமும் தம்பியிடமும் இருந்த பென்சில்களின் மொத்த நீளம் யாது?

.....cm .....mm


24. P, Q, R, S, T, U சில நகரங்கள் அமைந்துள்ள விதம் தரப்பட்டுள்ளது.

(i) Q நகரமானது S நகரத்திற்கு எத்திசையில் உள்ளது?

.....

(ii) நகரம் P ஆனது T யிற்கு .....

திசையிலும் ..... இற்கு வடமேற்குத் திசையிலும் காணப்படுகின்றது.



25. முற்பகல் 6.00 இற்கு நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட பேருந்து 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் கண்டியை அடைந்தது. அங்கு 30 நிமிடங்கள் தாமதித்த பின் 2 மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின் கொழும்பை அடைந்தது. பேருந்து கொழும்பை அடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்திற்கேற்ப எழுதுக.

.....

26. 620 தோடம்பழங்களில் 80 ஐ மீதப்படுத்தி வைத்து ஏனையவற்றை ஆறு பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

.....

27. ஒரு தேயிலைத்தோட்டத்தில் முதல் நாளில் 39kg 900g தேயிலைக் கொழுந்தும் இரண்டாம் நாளில் 55kg 850 g தேயிலைக் கொழுந்தும் பறிக்கப்பட்டது. இரு நாட்களும் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

.....


www.ikedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

28. 150g பருப்பின் விலை ரூபாய் 36.00 ஆகும். எனின் 1kg பருப்பு வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

.....

29. தரம் 5 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தொடர்பான விபரம் வரைபில் தரப்பட்டுள்ளது.




(i) பச்சை நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கை சிவப்பு நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். அதனை நிழற்றிக் காட்டுக.

(ii) தரம் ஐந்து வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

● **30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. சூரிய நமஸ்காரப் படிமுறையில் 3ஆம், 4ஆம், 5ஆம் படிமுறையாக அமைவது

(1) 
(2) 
(3) 

31. நான் சுவாசிக்கும் ஒலியையும் நன்றாகச் செவிமடுக்கின்றேன். எனக்கு இப்போது எனது இதயத்தின் ஒலி மட்டுமே கேட்கிறது. ஆம் எனது உள்ளம் அமைதியடைந்துள்ளது. எனது உடலும் உள்ளமும் அமைதியடைந்துள்ளன. இக் கூற்று

(1) உள்ளத்தைத் தளர்த்துதல் (2) பிரார்த்தனை (3) உடலைத் தளர்த்துதல்

32. ஆணிவேர் காணப்படும் தாவரத் தொகுதி எது?

(1) பனை, தென்னை, கமுகு, நெல்

(2) பலா, வேம்பு, கொய்யா, முதிரை

(3) இலுப்பை, கமுகு, கித்துள், கடைச்சி

33. இலுப்பை, கொன்றை ஆகியவை பூக்கும் மாதம்

(1) பங்குனி மாதம் (2) ஆவணி மாதம் (3) கார்த்திகை மாதம்

34. பின்வரும் பண்புகளைக் கொண்ட வித்து பரவலடையும் முறை யாது?

- கொழுக்கி போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.
- ஒட்டும் தன்மை காணப்படும்.
- சுவையான சதைப்பகுதியைக் கொண்டிருக்கும்.

(1) நீரினால் பரவலடைகின்றது.

(2) காற்றினால் பரவலடைகின்றது.

(3) விலங்கினால் பரவலடைகின்றது.

www.ikedu.lk

35. வறள்நிலப் பிரதேசங்களில் வளரும் தாவரங்களைக் கொண்ட தொகுதி

(1) வாழை, கமுகு, கங்கூன்

(2) பிரண்டை, கள்ளி, கற்றாளை

(3) தென்னை, இலந்தை, கொகில

36. செயற்பாடு ஒன்றிற்காக தரம் 5 மாணவர்கள் திறந்த வெளியில் காணப்பட்ட புல்லினை தகரம் ஒன்றினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தனர். அப்போது அவர்களால் அவதானிக்க முடிந்தது யாது?

(1) புற்கள் பச்சை நிறமாகக் காணப்பட்டன.

(2) புற்கள் கரும் பச்சை நிறமாகக் காணப்பட்டன.

(3) புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.

37. பின்வருவனவற்றுள் ஈருடக வாழி எது?

(1) ஆமை (2) முதலை (3) தவளை

38. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது?

(1) சுண்டெலி (2) கலவத்தன் (3) வரிக்குதிரை

39. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் ஒழுங்குமுறை

(1) குடம்பி - முட்டை - கூட்டுப்புழு - நிறையுடலி

(2) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி

(3) குடம்பி - கூட்டுப்புழு - முட்டை - நிறையுடலி

40. "சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான, இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டுமக்கள் யாவரும் இருப்பார்களாக." இதை உணர்த்துவது இலங்கையின்

(1) தேசிய விளையாட்டு (2) தேசியக் கொடி (3) தேசிய இலச்சினை

41. சப்பிரகமுவா, வடமத்திய ஆகிய இரு மாகாணங்களிலும் உள்ளடங்குகின்ற மாவட்டங்கள் முறையே

(1) மொனராகலை, குருநாகல் (2) கேகாலை, அநுராதபுரம் (3) இரத்தினபுரி, மாத்தளை

42. எமது நாட்டில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் ஆகியோர் கொண்டாடும் பண்டிகைகள் முறையே

(1) ஈஸ்ட்டர், ஹஜ்பெருநாள், புதுவருடப்பிறப்பு, பொசன்

(2) புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி, வெசாக்

(3) வெசாக், தீபாவளி, றம்ழான், பெரியவெள்ளி

43. குளத்தையும், கட்டுவித்த மன்னனையும் சரியாகக் கொண்டது

(1) மின்னேரியா - 2ம் அக்போ


(2) கலாவாவி - தாதுசேனன்

(3) சேனநாயக்க சமுத்திரம் - பண்டுகாபயன்

44. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்

(1) தலதாமாளிகை (2) திருக்கோணேச்சரம் (3) யாழ்ப்பாணக்கோட்டை

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

45. 

இப் போக்குவரத்துச் சமிக்ஞை குறிப்பது

(1) பின்னே செல்லுங்கள்.

(2) நிறுத்துங்கள்

(3) பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

46. வீதிச் சுற்றுவட்டங்களில் முதலில் எப்பக்கத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு இடமளித்தல் வேண்டும்?

(1) வலது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு.

(2) எப்பக்கத்தால் வருவோரும் செல்ல முடியும்.

(3) இடது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு.

47. பின்வருவனவற்றுள் தூய செயற்பாடு எனக் கூற முடியாதது?

(1) மலசல கூடம் சென்றதன் பின்னர் சவர்க்காரம் இட்டு கைகழுவுதல்.

(2) காலத்துக்குக் காலம் நகங்களை வெட்டிக் கொள்ளுதல்.

(3) உணவு சமைக்கும் போது தலைமுடி, மூக்கைத் தொடுதல்.

48. வீடுகளினுள் வெளிச்சம், காற்றோட்டம் வருவதற்காக அமைக்கப்படுபவற்றுள் ஒன்று அல்லாதது எது?

(1) வீட்டிற்கு ஓட்டினால் அமைக்கப்பட்ட கூரை அமைத்தல்.


(2) யன்னல், நிலைகளின் மேற்பகுதியில் பூக்கல் அமைத்தல்.

(3) வீடுகளில் யன்னல் அமைத்தல்.

49. **'நொருங்கக் கூடியது'** என்பதைக் குறிப்பது.

(1) 

(2) 

(3) 

50. முற்காலத்தில் தானியங்களை மாவாக அரைப்பதற்கு எவ் உபகரணத்தைப் பயன்படுத்தினர்?

(1) உரல் (2) ஆட்டுக்கல் (3) திரிகைக்கல்

51. ஊசித்துளைக் கமராவின் திரை செய்யப் பயன்படுவது

(1) வெள்ளைத் திசுத்தாள் (2) தகரத்துண்டு (3) காட்போட் மட்டை

52. இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள் ஒழுங்கு முறையில் அமைவது.

(1) ஆங்கிலேயர் ஒல்லாந்தர் போர்த்துக்கீசர்

(2) போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர்

(3) இந்தியர் ஆங்கிலேயர் ஒல்லாந்தர்

53. நீரைத் தினமும் போதியளவு அருந்துவதால் உண்டாகும் நன்மைகளில் ஒன்று

(1) உதடுகள் உலர்ந்து போதல்.

(2) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாக இருக்கும்.

(3) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்.


54. தேசியக்கொடிக் கமிட்டி, தேசியகீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டவர் யார்?


(1) கொங்காலேகொட பண்டா (2) ஆதர். சி. கிளாக் (3) ரீ.பீ ஜாயா


www.kedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

55. எவ் மின்சுற்று இதில் ஒளிரக் கூடியது?

(1) 

(2) 


(3) 

56. போலியான, தரக்குறைவான பண்டங்கள், சேவைகள் விற்பனை செய்யப்படுகின்றதெனின் அவை தொடர்பாக எங்கு சென்று அறிவிக்க வேண்டும்?

(1) பிரதேச செயலாளர் அலுவலகம்

(2) கிராம அதிகாரி அலுவலகம்

(3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

57. 

இவ் நீர்ச்சுழலி சுழலும் வேகத்தை அதிகரிக்க யாது செய்யலாம்?

(1) சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தைக் குறைத்தல்.

(2) சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல்.

(3) சக்கரத்தைப் பெரிதாக அமைத்தல்.

58. நெருப்புக் காய்ச்சல், கல்லீரல் அழற்சி போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைவது

(1) அசுத்த நீரைப் பயன்படுத்தல்.

(2) பழுதடைந்த உணவை உண்ணுதல்.

(3) நோய்க்காவியான நுளம்பு தீண்டுதல்.

59. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையில் மாணவர்களாகிய நீங்கள் அடையக் கூடிய நன்மைகளில் ஒன்று.

(1) இலவசமாகப் பயணிக்கமுடியும்.

(2) குறைந்த செலவில் பருவகாலச்சீட்டினைப் பெற்று பயணிக்கமுடியும்.

(3) விரும்பிய இடத்திற்கு பணமின்றிச் செல்லமுடியும்.

60. தரப்பட்ட காட்சிப்படத்தை அவதானித்து ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருக்கக் கூடியவாறு மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1) .....

2) .....

3) .....

www.lkedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved




வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

தரம் 5 மாணவர்களுக்கான நிகழ்நிலைப் பரீட்சை - 2021

பரீட்சை - 07

வினாத்தாள் - I
விடைகளும் புள்ளித்திட்டமும்

40 × 2.5 = 100

01.	(3)	
02.	(1)	
03.	(3)	C, F B, D A, E
04.	(3)	பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்
05.	(2)	இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.
06.	(2)	
07.	(3)	யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)
08.	(3)	A - 10, B - 12, C - 6, D - 4
09.	(2)	நாட்டுப் பற்று
10.	(3)	நாடு, நேயம், பெயர்
11.	(3)	43
12.	(1)	A
13.	(3)	பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.
14.	(2)	O N J K
15.	(2)	15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
16.	(3)	தென்மேற்கு
17.	(2)	11
18.	(2)	பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும்.
19.	(1)	பக்கங்கள் - 7 உச்சிகள் - 7
20.	(3)	200g, 100g, 50g, 20g, 5g
21.	(1)	செவ்வாய், ஞாயிறு
22.	(3)	U, S, V
23.	(2)	அப்பா
24.	(2)	
25.	(3)	6 நாட்களில்
26.	(1)	16
27.	(1)	**v**
28.	(2)	15 செக்கன்கள
29.	(2)	12
30.	(3)	ரூபாய் 150.00
31.	(3)	
32.	(2)	இரண்டாம் நிலை
33.	(2)	8
34.	(3)	பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4
35.	(3)	8, 3
36.	(1)	
37.	(2)	10 குற்றிகள்
38.	(3)	H B A C E D G F
39.	(1)	
40.	(2)	அ, ஈ, ஆ, உ, இ, ஊ

www.ikeduk.lk


 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வினாத்தாள் - II
விடைகளும் புள்ளித்திட்டமும்

1.	**(i)**	தஞ்சம்			**(1 புள்ளி)**
	(ii)	வீதிகளிலும்			**(1 புள்ளி)**
	(iii)	மக்கள்			**(1 புள்ளி)**
	(iv)	கடும்			**(1 புள்ளி)**
	(v)	பாடசாலைகளில்			**(1 புள்ளி)**
	(vi)	பாதிக்கப்பட்டுள்ளன / புகுந்துள்ளனர் / விழுந்துள்ளன			**(1 புள்ளி)**
2.	**(i)**	இளமையிலேயே			**(1 புள்ளி)**
	(ii)	தங்கப்பேழை			**(1 புள்ளி)**
3.	**(i)**	**(✔)**			**(1 புள்ளி)**
	(ii)	**(✘)**			**(1 புள்ளி)**
	(iii)	**(✔)**			**(1 புள்ளி)**
4.	**(i)**	ஒத்திகை			**(1 புள்ளி)**
	(ii)	பழமொழி			**(1 புள்ளி)**
5.	**(i)**	விறுவிறுப்பாக			**(1 புள்ளி)**
	(ii)	எதிர்கொள்ளல்			**(1 புள்ளி)**
6.	**(i)**	கடனும் , பயிரும்			**(1 புள்ளி)**
	(ii)	பொய்யா தொழுகின் / உள்ளத்து ளெள்ளாம்			**(1 புள்ளி)**
7.	**(i)**	பீர்பால்			**(1 புள்ளி)**
	(ii)	சிகைக்காய்			**(1 புள்ளி)**
8.	**(i)**	பகைவன்			**(1 புள்ளி)**
	(ii)	பிளவு			**(1 புள்ளி)**
	(iii)	"எந்த எண்? எனக்கும் ஒன்றும் புரியவில்லையே!" என்று சற்றக் குழப்பத்துடன் கேட்டான்.			**(1 புள்ளி)**
9.	**(i)**	லாயம்			**(1 புள்ளி)**
	(ii)	காலங்கள்			**(1 புள்ளி)**
10.	**(i)**	Chair	**(ii)**	Goat	**(2 புள்ளி)**
11.	**(i)**	Plants	**(ii)**	Clothes	**(2 புள்ளி)**
12.	**(i)**	இது உங்களுடையதா?			**(1 புள்ளி)**
	(ii)	நான் உங்களுக்கு உதவலாமா?			**(1 புள்ளி)**
13.		பந்திகாமறய			**(1 புள்ளி)**
14.		வாருங்கள் பிள்ளைகள்			**(1 புள்ளி)**


www.lkedu.lk

 முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

15.	நாற்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொன்று		**(2 புள்ளி)**
16.	56709, 56907, 56079 (40000-60000 இற்கு இடைப்பட்ட எண்)		**(2 புள்ளி)**
17.	15 முக்கோணங்களுக்கு நிழற்ற வேண்டும்.		**(2 புள்ளி)**
18.	XIII		**(2 புள்ளி)**
19.	**(i)** 8 **(ii)** 		**(2 புள்ளி)**
20.	375 ml		**(2 புள்ளி)**
21.	கனவுரு, 12, 6, 8		**(2 புள்ளி)**
22.	320 பிள்ளைகள்		**(2 புள்ளி)**
23.	**(i)** 8 cm 8 mm **(ii)** 22 cm 3 mm		**(1 புள்ளி)** **(1 புள்ளி)**
24.	**(i)** தென்மேற்கு **(ii)** மேற்கு, U		**(1 புள்ளி)** **(1 புள்ளி)**
25.	12 : 55		**(2 புள்ளி)**
26.	90 தோடம்பழங்கள்		**(2 புள்ளி)**
27.	95 kg 750 g / 95750 kg		**(2 புள்ளி)**
28.	ரூபாய் 240.00		**(2 புள்ளி)**
29.	**(i)** 25ஐக் குறிக்குக **(ii)** 130 மாணவர்கள்		**(1 புள்ளி)** **(1 புள்ளி)**
30.	**(3)**		**(1 புள்ளி)**
31.	**(1)**	உள்ளத்தைத் தளர்த்துதல்	**(1 புள்ளி)**
32.	**(2)**	பலா, வேம்பு, கொய்யா, முதிரை	**(1 புள்ளி)**
33.	**(2)**	ஆவணி மாதம்	**(1 புள்ளி)**
34.	**(3)**	விலங்கினால் பரவலடைகின்றது.	**(1 புள்ளி)**
35.	**(2)**	பிரண்டை, கள்ளி, கற்றாளை	**(1 புள்ளி)**
36.	**(3)**	புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.	**(1 புள்ளி)**
37.	**(3)**	தவளை	**(1 புள்ளி)**

www.lkedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

38.	(3)	வரிக்குதிரை	(1 **புள்ளி**)
39.	(2)	முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி	(1 **புள்ளி**)
40.	(3)	தேசிய இலச்சினை	(1 **புள்ளி**)
41.	(2)	கேகாலை, அநுராதபுரம்	(1 **புள்ளி**)
42.	(3)	வெசாக், தீபாவளி, றம்ழான், பெரியவெள்ளி	(1 **புள்ளி**)
43.	(2)	கலாவாவி - தாதுசேனன்	(1 **புள்ளி**)
44.	(3)	யாழ்ப்பாணக்கோட்டை	(1 **புள்ளி**)
45.	(3)	பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.	(1 **புள்ளி**)
46.	(1)	வலது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு.	(1 **புள்ளி**)
47.	(3)	உணவு சமைக்கும் போது தலைமுடி, மூக்கைத் தொடுதல்.	(1 **புள்ளி**)
48.	(1)	வீட்டிற்கு ஓட்டினால் அமைக்கப்பட்ட கூரை அமைத்தல்.	(1 **புள்ளி**)
49.	(2)		(1 **புள்ளி**)
50.	(3)	திரிகைக்கல்	(1 **புள்ளி**)
51.	(1)	வெள்ளைத் திசுத்தாள்	(1 **புள்ளி**)
52.	(2)	போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர்	(1 **புள்ளி**)
53.	(2)	சிறுநீரகங்கள் ஆரோக்கியமாக இருக்கும்.	(1 **புள்ளி**)
54.	(3)	ரீ.பீ ஜாயா	(1 **புள்ளி**)
55.	(3)		(1 **புள்ளி**)
56.	(3)	நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை	(1 **புள்ளி**)
57.	(2)	சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல்	(1 **புள்ளி**)
58.	(1)	அசுத்த நீரைப் பயன்படுத்தல்.	(1 **புள்ளி**)
59.	(2)	குறைந்த செலவில் பருவகாலச்சீட்டினைப் பெற்று பயணிக்கமுடியும்.	(1 **புள்ளி**)

60. பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. (**6 புள்ளிகள்**)

முழு விடைத்தாளையும் கவனத்திற் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதியிருப்பின் **2 புள்ளிகள்** வழங்கவும்.

www.kedu.lk